செய்தி வெளியீட்டு எண் 320
பத்திரிகைச் செய்தி. 30-4-08

## மீன்பிடி தடைக் காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் கடற்கரைப் பகுதியில் அனைத்து கடலோர மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் கடல் மீன்வளத்தினை பாதுகாத்திட மீன்பிடித் தடை செயல்படுத்தப்படுகிறது.

அதன்படி, கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு சட்டம் 1983 ன் கீழ் அரசு, ஒவ்வொரு ஆண்டும் மீன்இனப்பெருக்க காலமான 45 நாட்களுக்கு, தமிழகத்திற்குட்பட்ட கடற்பகுதியில், மீன்வளத்தினை பாதுகாத்திடும் பொருட்டு மீன்பிடிவிசைப்படகுகள் / இழுவலைப் படகுகள் மூலம் தமிழ் நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை பகுதிகளில் மீன்பிடிப்பு மேற்கொள்ள தடை விதித்து வருகிறது. மீன்பிடித்தடைக்காலம் பின்வருமாறு:-

கிழக்குக் கடற்கரைப் பகுதி – திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி வரை ( 1016 கி.மீ.நீளம் – ஏப்ரல் 15 முதல் மே 29 வரை இரு நாட்களும் உள்ளிட்டு)

மேற்கு கடற்கரைப் பகுதி – கன்னியாகுமரி முதல் நீரோடி வரை ( 60 கி.மீ.நீளம் – ஜூன் 15 முதல் ஜூலை 29 வரை இரு நாட்களும் உள்ளிட்டு)

தமிழகத்தில் இதுநாள் வரை பதிவு செய்யப்பட்ட மீன்பிடி கலன்களின் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மீன்பிடி விசைப் படகுகள் | – | 5596 |
| 2. | மரத்தினால் ஆன வள்ளம் | – | 7511 |
| 3. | கண்ணாடி இழை வள்ளம் | – | 8002 |
| 4. | மரத்தினால் ஆன கட்டுமரம் | – | 19959 |
| 5. | கண்ணாடி இழை கட்டுமரம் | – | 9709 |
| | மொத்தம் | – | 50777 |

சுமார் 2 இலட்சம் மீனவர் குடும்பங்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுப்பட்டுள்ளன. மீன்பிடி தடைக்காலங்களில் விசைப்படகு மற்றும் இழுவலைப் படகுகள் கொண்டு மீன்பிடித்தல் தடைச்செய்யப்பட்டுள்ளதால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், தொழிலாளர்கள் விசைப் படகு தொழிலாளர்கள் எந்த வேலைவாய்ப்பும் இல்லாமல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

கடலோர மாவட்ட மீனவர்களிடமிருந்து மீன்பிடித் தடைக்காலத்தில் நிவாரணம் வழங்கிட கோரி கோரிக்கைகள் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்றன.

மீனவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதல்வர் பரிவுடன் பரிசீலித்து மீன்பிடித் தடைக்காலங்களில் ஒரு மீனவ குடும்பத்திற்கு ரூ500/– வீதம் நிவாரணத் தொகை வழங்கிட முடிவு செய்துள்ளார் .இவ்வறிப்பினால் சுமார் 2 இலட்சம் மீனவ குடும்பங்கள் பலன் அடைவார்கள். இதற்காக அரசுக்கு சுமார் ரூ10 கோடி செலவினம் ஏற்படும்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

2/2